செ.வெ.எண் : 18/ ஏப்ரல் நாள் : 11.04.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## பாம்பன் கடல் பாலத்தில் 3000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சி

## Book of World Records அமைப்பின் மூலம் "Lengthiest Human Chain on Pamban Sea Bridge" என சாதனை நிகழ்வாக அங்கீகாரம்

நாடாளுமன்ற மக்களவை பொதுத்தேர்தலை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், பாம்பன் சாலை பாலத்தில் இன்று (11.04.2019) வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கையாக 3000-க்கும் மேற்பட்ட நபர்கள் பங்கேற்ற மாபெரும் மனிதச்சங்கிலி நிகழ்ச்சியினை, Book of World Records அமைப்பின் மூலம் "Lengthiest Human Chain on Pamban Sea Bridge" என சாதனை நிகழ்வாக அங்கீகரிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.நரேந்திரசிங் பர்மார்,இ.ஆ.ப., அவர்கள், பரமக்குடி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலுக்கான பொது பார்வையாளர் திரு.ஆனந்த் ஸ்வரூப்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான காவல்துறை பார்வையாளர் திரு.ஸ்ரீனிவாசலு,இ.கா.ப., உட்பட பலர் பங்கேற்றனர்.

இராமேஸ்வரத்திற்கு சாலை வழியாகச் செல்ல பாம்பன் சாலை பாலம் மட்டுமே வழியாக உள்ளது. இப்பாலமானது 2.345கி.மீ நீளம் பாலமாகவும் (Bridge portion), இராமேஸ்வரம் மார்க்கத்தில் 600 மீ நீளமும், மண்டபம் மார்க்கத்தில் 900 மீ நீளமும் பாலத்தின் இரங்கு தலங்களாகவும் (Bridge Slopes) என மெத்தம் சுமார் 5 கி.மீ நீளமாக உள்ளது. பாம்பன் பாலமானது ஆசிய அளவில் மிக நீளமான கடல் பாலங்களில் (Sea Bridge) ஒன்றாக கருதப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பாம்பன் பாலத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கையாக 3000-க்கும் மேற்பட்ட நபர்கள் பங்கேற்ற மாபெரும் மனிதச்சங்கிலி நிகழ்ச்சி நடைபெற்றது.

இம்மனித சங்கிலியில் பொதுமக்கள், மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மீனவ சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். இம்மனித சங்கிலியில் பங்கேற்ற அனைவரும் தேர்தல் தொடர்பான தகவல்களை 1950 என்கிற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு அறியலாம். இளைஞர்கள் மற்றும் எதிர்கால வாக்காளர்களுக்கு அதிகாரம் அளிப்போம். வாக்காளர் பட்டியலில் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளை நீக்க முற்பட வேண்டும். ஜனநாயகம் தழைக்க அனைவரும் வாக்களிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள் உட்பட எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது. மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் உரிய வசதிகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய போஸ்டர்களை கையில் ஏந்தியவாறு அணிவகுத்து நின்று விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டனர்.

அதன் தொடர்ச்சியாக மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மனித சங்கிலியில் பங்கேற்ற அனைவரும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அதன் பின்பு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி, பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 100 சதவீதம் வாக்குப்பதிவு எய்துதல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரம் ஆகியவற்றின் செயல்பாடு குறித்து விளக்கமளித்தல், எனது வாக்கு விற்பனைக்கு அல்ல உள்ளிட்ட நோக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள, ஆசிய அளவில் மிக நீளமான கடல் பாலங்களில் ஒன்றாக கருதப்படுகின்ற பாம்பன் பாலத்தில் இன்றைய தினம் 3000-க்கும் மேற்பட்ட நபர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு மனிதச் சங்கிலி நடத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் அச்சமின்றி எவ்வித தூண்டுதலுக்கும் ஆட்படாமல் சுதந்திரமாக தங்களது வாக்குகளை பதிவு செய்திட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்திய கடலோர காவல்படை (மண்டபம்) கமாண்டர் திரு.வெங்கடேஷ், இந்திய கப்பற்படை துணை கமாண்டர் திரு.சிமோத்கார்த்திகேயன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.த.கெட்சி லீமா அமலினி, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் திரு.கோ.குருநாதன், தேர்தல் செலவின பார்வையாளர்கள் திரு.ஷ்யாம்குமார், திரு.ஓம் பிரகாஷ் படேல், திரு.அமித்குப்தா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கேசவதாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மரு.எஸ்.கண்ணபிரான் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**